**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.**

**MCOP NO.702/2022**

**03.11.2022 - ம.சா. 1 ஸ்ரீகலா சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் என் கணவர் இறந்து விட்டார். என்னுடைய திருமணத்திற்கு பிறகு என் கணவருடன் சென்னையில் குடியிருந்து வந்தேன். என் மாமனார், மாமியார் கடப்பாகத்தில் வாழ்ந்து வந்தார்கள். என்னுடைய கணவரின் பராமரிப்பில் தான் என் மாமனார், மாமியார் வாழ்ந்து வந்தார்கள். என் மாமனார் வயதானவர். தற்போது அவருக்கு 80 வயதாகிறது. வருமானம் எதுவும் இல்லை. என் கணவர் பி.இ. படித்துள்ளார். என் கணவர் பி.இ. படித்ததற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவருடைய வயதை காண்பிக்க நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 ல் கண்டுள்ள நிறுவனமே இல்லை என்றும், ம.சா.ஆ.1 சான்றிதழில் சொல்லப்பட்டுள்ள சம்பளப் பட்டியல் என்னால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.1 வருமானச் சான்றிதழே இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் எந்த வேலையில் பணிபுரிந்தார் எப்போது சேர்ந்தார் என்பதற்கான அவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் எந்த நிறுவனத்தில் எப்போது சேர்ந்தார் என்பதைக் காண்பிக்கக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் வருகைப்பதிவேட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதமாதம் என் கணவரின் சம்பளப் பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் பே சிலிப்பை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவரின் வங்கிக் கணக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் வருமான வரிக் கணக்கை தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் படிவம் 16 யும் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் வேறு வேலை பிரைவேட்டாக செய்து வருமானம் ஈட்டியதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. என் கணவர் 18.5.2015ல் இறந்தார். இவ்வழக்கை நான் 5.8.2015ல் பதிவு செய்துள்ளேன். ஆரம்பத்தில் 1ம் எதிர்மனுதாரரை மட்டும் சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2019ல் தான் 2ம் எதிர்மனுதாரரை பார்ட்டியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆரம்பத்தில் பி,ஆர்.டி.சி டிராண்ஸ்போர்டு கார்ப்பரேஷன் இன்சூரன்ஸ் போடுவது எங்களுக்கு தெரியாது. தெரிந்த பிறகு 2ம் எதிர்மனுதாரரை பார்ட்டியாக சேர்த்துள்ளேன். எதன் அடிப்படையில் 2ம் எதிர்மனுதாரரை பார்ட்டியாக சேர்த்தேன் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பஸ்சின்

மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் இன்ஸ்யூர் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதனை தெரிந்து கொண்டே வேண்டும் என்றே 2ம் எதிர்மனுதாரை சேர்க்காமல் பின்னிட்டு சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே எந்த தேதியில் 2ம் எதிர்மனுதாரர் சேர்க்கப்பட்டாரோ அந்த தேதியில் இருந்து தான் வட்டி கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. விபத்து எப்படி நடைபெற்றது என்பதைக் காட்டக்கூடிய இறுதி குற்றப்பத்திரிக்கையை நான் தாக்கல் செய்யவில்லை. பஸ் செல்லும் போது ஆட்டோ திடீர் என்று வந்துவிட்டது என்றும், அதன் காரணமாக பஸ் ஓட்டுநர் வாகனத்தை மண் ரோடில் இறக்கியதால் விபத்து ஏற்பட்டது என்றும், ரோடு சரியாக இல்லாததால் அரசாங்கத்திடம் தான் நஷ்டஈடு கோர முடியும் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது 1ம் எதிர்மனுதாரருக்கு இன்சூரன்ஸ் உள்ளதா என்று நாங்கள் பார்க்கவில்லை. என் கணவரின் பான் கார்டை நான் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.1 வருமான சான்றிதழ் தவறானது என்றும், என் கணவர் எந்த வேலையும் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் 2ம் எதிர்மனுதாரரிடம் இருந்து நஷ்ட ஈடை மனு போட்ட தேதியில் இருந்து கோர முடியாது என்றும், சேர்த்த தேதியில் இருந்து தான் கோர முடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகப்படியானது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- ஸ்ரீகலா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.